செ.வெ.எண் 813 | நாள் 9-11-09

பத்திரிக்கைச் செய்தி

## குழந்தைத் தொழிலாளர் முறையை எதிர்த்து சென்னையில் நவம்பர் 10-ல் விழிப்புணர்வு ஸ்டிக்கர் பிரச்சாரம்

குழந்தைத் தொழிலாளர் முறையை எதிர்த்து சென்னையில் நவம்பர் 10-ல் விழிப்புணர்வு ஸ்டிக்கர் பிரச்சாரம் நடைபெறவுள்ளது. தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் நிலையை அகற்றிட தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. 17 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தை ஒருங்கிணைத்து நடத்துகின்றது. இத்திட்டத்தின் கீழ் 505 சிறப்புப் பள்ளிகளில் சுமார் 17000 மீட்டெடுக்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் பயின்று வருகின்றனர்.

நவம்பர் 14 அன்று குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, வரும் 10-11-2009 அன்று சென்னை முழுவதும் ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சி (Sticker Campaign) நடைபெற உள்ளது. இதில்

சென்னை மாநகராட்சியிலிருந்து திருவொற்றியூர் மேல்நிலைப்பள்ளி, மூலக்கடை உயர்நிலைப் பள்ளி, வியாசர்பாடி மேல்நிலைப்பள்ளி, கொளத்தூர் மேல்நிலைப்பள்ளி, விருகம்பாக்கம் மேல்நிலைப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, நுங்கம்பாக்கம் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, வண்ணாரப்பேட்டை, தேனாம்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சி.ஐ.டி. நகர் மேல்நிலைப்பள்ளி, மற்றும் அடையாறு மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவியர் பங்கேற்று, அந்தப் பகுதியில் உள்ள கடைகள், வீடுகள், ஹோட்டல்கள் மற்றும் பிற வர்த்தக நிறுவனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டவிருக்கின்றனர். குழந்தைகளை வேலைக்கு அனுப்பக்கூடாது என்பதைத் தெரிவித்தும், அவர்களை பள்ளியில் சேர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும்

1. குழந்தைத் தொழிலை ஒழிப்போம்!
   குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவோம்!

2. குழந்தைத் தொழிலாளர்களின் வியர்வைத் துளிகள்!
   நம் இந்தியத் தாயின் கண்ணீர்த் துளிகள்!

3. குழந்தைகள் இருக்க வேண்டிய இடம் பள்ளிக்கூடம். தொழிற்கூடமல்ல!

4. குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி மேதை ஆக்குங்கள்
   வேலைக்கு அனுப்பி பேதை ஆக்காதீர்கள்.

5. குழந்தைச் செல்வம் காணுதல் இனிமை
   குழந்தையால் செல்வம் காணுதல் சிறுமை

5. குழந்தைகளை வேலைக்கு அமர்த்தினால் ரூ. 20,000/- அபராதம் மற்றும்
   ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கப்படும்.

6. "Make the child learn, not earn".

என்பது போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்படவுள்ளன. இப்பணிகளில் தொழிலாளர் துறை அலுவலர்கள், தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அப்பகுதிகளைச் சேர்ந்த அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்க உள்ளனர்.

இதேபோன்று ஸ்டிக்கர் ஒட்டும் பணி மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் பள்ளி மாணவர்களின் உதவியோடு நடைபெற உள்ளது.

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9